Our Values

HAWORTH

நாங்கள் எங்களுடைய வாடிக்கையாளர்கள் சொல்வதைக் கேட்கிறோம்.
அவர்களுடைய கருத்துகளை எங்கள் தயாரிப்புகள், சேவைகளில் ன்படுத்துகிறோம், அதன்மூலம் மக்களுடைய வாழ்க்கை, தொழில்களை மேம்படுத்துகின்ற ஊக்கம் தருகிற இடங்களை வடிவமைக்கிறோம். எங்களுடைய கூட்டு நிறுவனங்கள், விநியோகஸ்தர்களுடன் இணைந்து, எங்களுடைய திறமைகள், நிபுணத்துவம் மற்றும் அறிவால் நாங்கள் மதிப்பை உருவாக்குகிறோம்.

நாங்கள் எங்களுடைய உறுப்பினர்களைச் சார்ந்திருக்கிறோம்.
ஆற்றல்மிகுந்த, ஆர்வத்துடன் பணியாற்றுகிற, எங்களது உறுப்பினர்களின் எல்லையற்ற சாத்தியங்களின்வழியே நாங்கள் ஒரே இலக்கை நோக்கி ஒற்றுமையாகப் பணியாற்றுகின்றோம். எங்கள் உறுப்பினர்களுடைய அனுபவம், கலாசாரப் பன்முகத்தன்மை, வாடிக்கையாளர்களிடம் அவர்கள் காட்டும் அர்ப்பணிப்புணர்வு ஆகியவை எங்கள் வெற்றிக்குத் துணைநிற்கின்றன. நாங்கள் எங்களுடைய உறுப்பினர்கள் சிறந்து விளங்க உதவுவதற்காகத் தொடர் கல்வியில் முதலீடு செய்கின்றோம்.

நாங்கள் நேர்மையை மதிக்கிறோம்.
நேர்மை, வெளிப்படைத்தன்மை, மற்றும் பொறுப்புடைமை ஆகியவை நம்பிக்கையின் அடித்தளங்கள் என நாங்கள் நம்புகிறோம். அனைவரும் ஒருவருக்கொருவர் பலன் தருகிற தொழில் உறவுகள், சட்டபூர்வமான, நெறிமுறை சார்ந்த செயல்பாடுகள், எங்கள் வாக்குறுதிகளைக் காப்பாற்றுதல், எங்கள் மதிப்பீடுகளை உயர்த்திப்பிடித்தல் ஆகியவற்றை நாங்கள் நம்புகிறோம்.

நாங்கள் தொடர் கல்வியைப் பின்பற்றுகின்றோம்.
வேகமாக வளர்ந்துவரும் ஓர் உலகில், எங்களுடைய அறிவை விரிவுபடுத்த நாங்கள் பலவிதமான எண்ணங்கள், வாய்ப்புகளை நாடுகிறோம். இந்தக் கற்றலை ஒவ்வொரு நாளும் பயன்படுத்துவதன்மூலம், நாங்கள் எங்கள் தொழிலை மாற்றுகிறோம், எங்கள் செயல்திறனை மேம்படுத்துகிறோம், எங்கள் வாடிக்கையாளர்களுடைய எதிர்பார்ப்புகளைத் துண்டும் வழிகளில் புதுமையாகச் சிந்திக்கின்றோம்.

நாங்கள் வடிவமைப்பின்மூலம் முன்னணியில் நிற்கின்றோம்.
குடும்பதொழில் அழகிய பொருட்கள் தயாரிப்பில் தொடங்கி சிறந்த செயல்திறன் மிகுந்த தீர்வுகளிருந்து ஊக்கம் தரும் இடங்கள் வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சியில் ஒரு நீண்ட வரலாறு உண்டு. எங்கள் உறுப்பினர்கள் படைப்புணர்வோடு சிந்திக்கவேண்டும், பிறருடன் இணைந்து பணியாற்றவேண்டும், சிறந்த யோசனைகளைச் செயலுக்குக் கொண்டுவர எல்லாவிதமான முயற்சிகளையும் செய்யவேண்டும் என்று நாங்கள் ஊக்குவிக்கின்றோம்.

நாங்கள் மதிப்பை உருவாக்குகிறோம்.
எங்கள் வாடிக்கையாளர்களின் பூர்த்திசெய்யப்படாத தேவைகளைப் பூர்த்தி செய்ய, நாங்கள் புதுமையான தீர்வுகளை வழங்குகின்றோம். எங்களின் வெற்றி எங்களுடைய உறுப்பினர்கள், அவர்களுடைய குடும்பத்தினர், எங்கள் பங்குதாரர்கள் மற்றும் எங்களுடைய ஒட்டுமொத்த தொடர்புகளின் வாழ்க்கைக்கும் வளர்ச்சிக்கும் பங்களிக்கிறது.

உலகை இன்னும் சிறப்பாக்குவதற்காக நாங்கள் உழைக்கின்றோம்.
தொழிலைத் தாண்டி, நாங்கள் சமூகத்துக்காகவும் சிந்திக்கின்றோம். பன்முகத்தன்மையைப் பின்பற்றுவது, நமது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது மற்றும் பொருளாதார மதிப்பை உருவாக்குவதன்மூலம் நாங்கள் எதிர்காலத்துக்கான நம்பிக்கையை விதைக்கின்றோம். எங்களால் இயன்றவரை, இந்த உலகை இன்னும் சிறப்பான ஓர் இடமாக, பணிபுரியவும் வாழவும், மாற்ற நாங்கள் உதவுகின்றோம்.

haworth.com
Haworth is a registered trademark of Haworth, Inc.